REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 25உ வெள்ளி (11—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 26உ சனி (12—11—55) [இதழ் 128

பூமிக்குள் புதைந்து வரும் நகரம்?

பர்ராவா (பெப்சு) நவ. 10—

இங்கிருந்த நான்கு மைல் தொலைவிலிருக்கும் ஹத்யா எனும் நகரம், எந்த நேரத்திலும் பூமிக்குள் மூழ்கிவிடலாம்—அழுந்திவிடலாம் என அஞ்சப்படுவதால, அதிகாரிகள், அங்கு வாழும் மக்களை அங்கிருந்து வெளியேறிவிடுமாறு எச்சரிக்கை செய்திருக்கின்றனராம். ஒரு இடுக்கு வழியில் அமைந்திருந்த 20 வீடுகள் தரைமட்டத்திற்கு 20 அடி கீழே புதைந்துவிட்டனவாம்.

இங்குள்ள எஞ்சினியர்கள் இது குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர் என்றாலும், பூகர்ப்ப இலாகாவினரை வரவழைக்க எற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியை ஏற்க சென்னை சர்க்கார் முடிவு?

சிறிய மாநிலம் போதுமாம்!

சிறுகக் கட்டிப் பெருக வாழ்வாராம்!

தேவிகுளம், பீர்மேடு குறித்து உயர்தரக் குழு முடிவெடுக்குமாம்

முதன் மந்திரி காமராசர் பேசுகிறார்

சென்னை, நவ. 10—

"மாநிலங்கள் புதியதாக அமையும்போது, சென்னை, அளவில் சிறியதாகி விடாதா?" என்று, டில்லியிலிருந்து திரும்பிய காமராசரைக் கேட்டபோது, அவர், 'சிறிய மாநிலமே நமக்குப் போதும்; அதிலேயே நாம் மகிழ்ச்சியுடன் வாழலாம்; சிறிய மாநிலமானாலும் நாம் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்,' என்று குறிப்பிட்டாராம்.

'சிறுகக் கட்டி பெருக வாழ்க' என்று தமிழில் உள்ள பழமொழியைச் சுட்டிக் காட்டியபோது, 'உண்மைதான்' என்று காமராசர் ஒப்புக்கொண்டாராம்.

சென்னையில் ஆந்திர—சென்னை எல்லைத் தகராறு குறித்து இரு மாநில அரசாங்கப் பிரதிநிதிகளிடையேயும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் முறிந்தது குறித்து ஆந்திரப் பிரதிநிதிகள், காங்கிரஸ் செயற்குழுவில் எதும் குறிப்பிடவில்லை என்றும், எனவே அந்தத் தகராறுகள் ஒரு எல்லைக் குழுவின் தீர்ப்புக்குப் போகவேண்டிய அவசியமிருக்கும் என்று தான் கருதவில்லை என்றும் காமராசர் தெரிவித்திருக்கிறார்.

'விசால ஆந்திரம்' அமையும் என்பதால், சேலம் மாவட்டத்தில் உள்ள ஓசூர் வட்டம் தங்களுக்கு வேண்டுமென ஆந்திரர் கேட்க மாட்டார்கள் என்று தான் நம்புவதாயும் காமராசர் தெரிவித்திருக்கிறார்.

'விசால ஆந்திரம்' உத்திரப் பிரதேசத்தைப்போல ஒரு பெரிய மாநிலமாக இருக்கும் என்றும், அதனால், ஆந்திரர் 'ஓசூர் வேண்டும்' எனத் தொடர்ந்து கேட்கமாட்டார்கள் என்றும் தான் நம்புவதாயும் காமராசர் தெரிவித்திருக்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு வட்டங்களைப் பொறுத்து, சென்னைப் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கையைத் தெரிவித்துவிட்டனர் என்றும், திரு-கொச்சிப் பிரதிநிதிகள் அந்தக் கோரிக்கைக்கு எதிராகக் கருத்தறிவித்திருக்கின்றனர் என்றும், எனவே, உயர்தரக் குழுதான் அதுகுறித்து முடிவு எடுக்கவேண்டும் என்றும், நவம்பர் 22-ந் தேதிக்குள் குழுவினர் தங்கள் தீர்ப்பை தரவேண்டியுள்ளதால், அவர்கள் இரு மாநிலங்களிலும் சுற்றுப்பயணம் செய்யக்கூடும் என்றும் காமராசர் தகவல் தந்திருக்கிறார்.

ஆந்திராவில் பால் பவுடர் தொழிற்சாலை

சென்னை, நவ. 10—

இரண்டாம் திட்டத்தின் கீழ் ஆந்திராவில் இரண்டு பால் பவுடர் உற்பத்திசாலைகள் துவங்குவது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறதாம்.

தொழிற்சாலை துவங்குவதற்கான இடங்கள் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றும். விசாரணை நடைபெற்றுக்கொண்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

ஒரு பால் கழகம் நிறுவுவதற்கான திட்டம் சர்க்காரின் முடிவுக்கு விடப்பட்டிருக்கிறது.

கலப்படமில்லாத நல்ல பால் ஆந்திர நகரங்கள் பலவற்றிற்கு கிடைக்கச் செய்வதற்கான திட்டங்கள் சிலவும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

மொழிச் சிக்கலுக்குப் பரிகாரம் தேட விசாரணைக் குழு

இலங்கையில் கொந்தளிப்பு

கொழும்பு, நவ. 10—

இலங்கையில் எழுந்துள்ள மொழிச் சிக்கலுக்கு சர்க்கார் தேடவேண்டிய பரிகாரம் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக, சிங்கள—தமிழ் தலைவர்களடங்கிய குழு ஒன்று நியமிக்க வேண்டும் என்று இலங்கை மந்திரிகள் சிலர் கோரிவருவதாகத் தெரியவருகிறது.

சிக்கல் குறித்து எழுந்துள்ள நிலைகளை ஆராய்வதற்காக, மந்திரிகள் உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த தமிழர்கள் நேற்று கூடியிருக்கின்றனர்.

அடுத்த கிழமையில் அவர்கள் மீண்டும் கூடி, மொழிச் சிக்கல் குறித்து தமிழ் உறுப்பினர்களின் ஒன்றுபட்ட கொள்கை ஒன்றினை வகுப்பார்கள் என்று தெரியவருகிறது.

இதற்கிடையில், 'அகில இலங்கை மலாய யூனியன்' என்ற இயக்கத்தவர், இலங்கையில் சிங்களம் மட்டுமே அலுவல் மொழியாக இருக்க வேண்டும் என்றும், ஆனால் இந்த மாற்றத்திற்கு 15 ஆண்டுகாலத் தவணை தரப்படவேண்டும் என்றும், ஒருமுகமாகத் தீர்மானித்திருக்கின்றனராம்.

சிங்களம் மட்டுமே அலுவல் மொழியாக வேண்டுமென்று கோரும் மனு ஒன்றை ஏந்திக்கொண்டு, 'லங்கா மாதா'வைக் குறிப்பதற்காக, வெள்ளை உடை அணிந்து ஏராளமான இளம்பெண்கள் பனதுரா எனும் இடத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர் என்றும், சுமார் 60 முக்கியமான இடங்கள் வழியாக வந்து பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

காங்கிரஸ் செயற் குழு முடிவு

பனம்பள்ளி வரவேற்கிறார்

திருவனந்தபுரம், நவ 10—

'கேரளத்துடன் சேர்க்க வேண்டிய பகுதிகள் குறித்து கருத்தறிவிப்பதற்கு, மாநில அரசாங்கத்திற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அகில இந்திய காங்கிரஸ் செயற்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம் அமைந்திருப்பது வரவேற்கத் தகுந்ததாகும்' என்று, திரு-கொச்சி முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன் தெரிவித்திருக்கிறார்.

தென் தாலுகாக்கள் ஐந்தும் சென்னையுடன் இணைக்கப்படாமல் கேரளத்துடனேயே இருக்கவேண்டும்; சென்னையில் உள்ள கூடலூர் தாலுகா கேரளத்திற்கு வேண்டும்'—என்று கோரும் அறிக்கை ஒன்று இன்னும் இரண்டொரு நாளில் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஜினீவா மாநாடு

தோல்வியில்தான் முடியுமா?

ஜினீவா, நவ. 10—

ஜெர்மன் ஐக்கியம், ஐரோப்பியப் பாதுகாப்பு ஆகிய இரு சிக்கல்களுக்கும் தங்களால் ஒரு முடிவு காண இயலாது போய்விட்டது என்பதை ஒப்புக்கொண்டு பேச்சு வார்த்தைகளை ஒத்திவைத்துவிடுவதென நான்கு வல்லரசு வெளி விவகார இலாகா மந்திரிகளும் தெரிவித்திருக்கின்றனர்.

இனிமேல் அவர்கள் நிகழ்ச்சிநிரலில் அடுத்துள்ள ஆயுதக் குறைப்பு, கிழக்கு-மேற்கு நாடுகளிடையே அரசியல் அல்லாத துறைகளில் தொடர்பு வளர்ச்சி இவை குறித்துப் பேசுவர் என்றும் தெரியவருகிறது.

அடுத்த கிழமையில் மாநாடு முடியும்போது, அவர்கள் மீண்டும் ஒருமுறை ஜெர்மன் ஐக்கியம், ஐரோப்பியப் பாதுகாப்பு இவை குறித்துப் பேசுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

காலவரையறையைக்கூட நீடிக்க வேண்டாமாம்

மாநில நிர்வாக போதனமொழியாக தமிழ் இடம் பெறும்!

மந்திரி சுப்பிரமணியம் மழுப்ப நினைக்கிறாரா?

★

சென்னை, நவ. 10—

மாநிலத்தின் ஆட்சி மொழியாக, போதன மொழியாக வட்டார மொழிதான் இருக்கவேண்டும் என்று சென்னை சர்க்கார், இந்தியப் பேரரசினர் நியமித்த ஆட்சி மொழிக் குழுவினர் கேட்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவிக்க முடிவெடுத்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

ஆனாலும், 1965-ம் ஆண்டில் அகில இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி மொழி இடம் பெறும்போது, மத்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து 'நிர்வாக உறவு' இவற்றிற்காக, இந்தியை மாநில சர்க்கார் அங்கீகரித்துக் கொள்ளும்—ஏற்றுக்கொள்ளும் என்றும் சென்னை சர்க்கார் முடிவு தெரிவித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

சென்னை போன்ற இந்தி வழங்காத பகுதிகளில், கட்டாயமாக போதிக்கப்படாத வகையில், இந்தி மொழியே இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்றும் சர்க்கார் கருதுகின்றனராம்.

அகில இந்திய அடிப்படையில் மத்திய சர்க்கார் உத்தியோகங்களுக்கு ஆட்கள் பொறுக்கும்போது சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் மொழியிலேயே போட்டிப் பரீட்சைகள் எழுத அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், என்றாலும், அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் இந்தி மொழியிலும் ஒரு பரீட்சை எழுதுமாறு கோரப்படலாம் என்றும் கருத்தறிவித்திருக்க முடிவு செய்திருக்கின்றனராம்.

சட்ட சபையில் உள்ள பல கட்சித் தலைவர்களும்கொண்ட மாநாடு ஒன்றைக் கூட்டி சர்க்கார் தங்கள் கொள்கையை விளக்கியதாகவும், ஏற்கனவே சர்க்கார் இந்தி மொழி பற்றிக் கொண்டிருந்த கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை என்று தெரிவித்ததாயும், மாநாட்டில் காங்கிரஸ், கம்யூனிஸ்டு, ம. சோ. கட்சி, தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், திராவிட சட்ட சபை கட்சி ஆகியவற்றின் சட்ட சபைத் தலைவர்களும், முதன் மந்திரியும், இன்னும் சில மந்திரிகளும் கலந்து கொண்டதாயும் தெரிகிறது.

மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே பதில் தெரிவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இந்தி மொழியை இந்தியாவின் அலுவல் மொழியாக ஆக்குவதற்குத் தரப்பட்டுள்ள காலவரையறையான 15 ஆண்டுகளை இன்னும் 18 ஆண்டுகள் அதிகரிக்க வேண்டும் என்று டாக்டர் இலட்சுமணசாமி போன்றவர்கள் சென்னை மேல் (சட்ட) சபையில் தெரிவித்த கருத்துக்களை சர்க்கார் கவனித்ததாகத் தெரியவில்லை.

மாறாக, மாநாட்டு முடிவில் பத்திரிகையாளரிடம் பேசிய நிதி மந்திரி சுப்பிரமணியம், காலவரையறையை அதிகரிக்குமாறு கோரத் தேவை இல்லை என்றும், அரசியல் சட்டத்திலேயே ஆங்கிலத்திலிருந்து இந்தி மொழியில் நிர்வாக வேலைகளைத் துவங்கும் இடைக்காலத்தில் சில 'ஏற்பாடு'களைச் செய்துகொள்ளுவதற்கு இடம் இருப்பதாயும் தெரிவித்திருக்கிறார்.

சென்னை போன்று இந்தி வழங்காத பகுதிகள், மத்திய சர்க்காருடன் நிர்வாகத் தொடர்புகொள்ளுவதற்கு இந்தியை உபயோகிக்க பூரணமாக முடியும் வரையில் 1965-க்குப் பின்னும், ஆங்கிலத்தையும் சேர்த்து உபயோகித்துக் கொள்ளலாம் என்றும், அதற்கு வழிசெய்யக் கோரப்படும் என்றும் பேசியிருக்கிறார்.

முதல் மொழியாக வட்டார மொழியும், இரண்டாவது மொழியாக ஆங்கிலமும், மூன்றாவது மொழியாக இந்தியும் இருக்க வேண்டும் என்று தான் கருதுவதாயும் மந்திரி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11—11—'55 வெள்ளி

ஏன் இந்தத் தகராறு?

அண்டை நாடுகளான பாகிஸ்தானுக்கும் — ஆப்கனிஸ்தானுக்குமிடையே மீண்டும் தகராறு கிளம்பியுள்ளது.

பாகிஸ்தான் தேசியக் கொடி ஆப்கன் ஆர்ப்பாட்டக்காரர்களால் அவமதிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவத்தை ஒட்டி இருநாடுகளிடையேயும் சமீப காலத்தில் எழுந்த தகராறு ஒருவழியாக முடிந்து, இரு நாடுகளும் அதனையொட்டி ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த மனக்கசப்பை விட்டுவிட்டு, ஒருவருக்கொருவர் நல்லெண்ணமுடன் வாழ்வது என்று ஒரு ஒப்பந்தமும் செய்துகொண்டனர். ஆனால், ஒப்பந்தத்தில் கையொப்பங்களிட்ட மை உலருவதற்கு முன்பாகவே மீண்டும் இரு நாடுகளிடையேயும் மனக்கசப்புத் தோன்றி, தகராருக வளர்ந்து, பகையாக முற்றுமோ என்ற அச்சம் பிறக்கும் நிலை வளர்ந்திருக்கிறது.

இந்தத் தகராறுக்குக் காரணம்தான் என்ன?

மேற்கு பாகிஸ்தான் முழுவதையும்—சிந்து, பஞ்சாப், பலுசிஸ்தான் வடமேற்கு எல்லை மாகாணம் போன்ற எல்லா மாநிலங்களையும்—தாங்கள் வர்ணிக்கிற சில அவசியங்களை முன்னிட்டு, ஒரே மாநிலமாக இணைத்து, அதற்கென ஒரு சர்க்காரையும் நியமித்துவிட்டனர்—பாகிஸ்தான் அரசியல்வாதிகள்!

வடமேற்கு எல்லை மாநிலத்திலும், பலுசிஸ்தானிலும் வாழும் பஷ்து மொழி பேசும் மக்கள், தாங்கள் தனித்துச் சுதந்திரமாக பக்துனிஸ்தான் என்ற எல்லைகொண்ட நாடு அமைத்து வாழ விரும்புவதாயும் பாகிஸ்தான் அமைவதற்கு முன்பிருந்தே கூறி வருகின்றனர்.

அந்த விருப்பங்கொண்ட பக்தூன் மக்கள், பாகிஸ்தான் அமைந்தபோது, அந்தப் புதிய நாட்டின் எல்லைக்குள் வாழ வேண்டியவர்களாயினர். அவர்களது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு முன்னின்று செயல்படுபவர்களில் எல்லைக் காந்தியும் ஒருவராக இருக்கிறார்.

'பக்தூன் மக்கள் தங்களுடன் இன, பண்பாட்டு உறவு கொண்டவர்கள் என்பதால், அவர்களின் நல்வாழ்வில் எங்களுக்கு அக்கரை இருப்பது நியாயமே' என்று கூறி, ஆப்கனிஸ்தான் சர்க்கார் பக்தூன் மக்களின் விடுதலைக் கோரிக்கைக்கு தங்களது மானசிகமான ஆதரவைத் தருவதாகக் கூறுகின்றனர்.

'மேற்கு பாகிஸ்தான் முழுவதும் ஒரே மாநிலமாக இணைக்கப்பட்டது, பக்தூன் மக்களின் விடுதலைக் குரலை ஒடுக்குவதற்குத்தான்,' என்று கூறி, எல்லை காந்தி போன்றவர்கள் அந்த ஒருமைப்புத் திட்டத்திற்கு பாகிஸ்தான் முழுவதிலும் எதிர்ப்புச் சக்தியைத் திரட்டி வருகின்றனர்.

பக்தூன் மக்களின் நியாயமான கோரிக்கையை தரைமட்டமாக்குகிற பாகிஸ்தான் சர்க்காரின் போக்கு தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றுகூறி, கராச்சியிலிருந்த தனது தூதுவரை ஆப்கனிஸ்தான் திரும்ப வரவழைத்துக்கொண்டது.

இதனைத் தொடர்ந்தே இருதரப்பாரிடையேயும் மனக்கசப்பு வளர ஆரம்பித்தது.

'மேற்குபாகிஸ்தானை இணைப்பது என்பது எங்கள் உள்நாட்டு விவகாரம்; இதில் தலையிடுவதற்கு ஆப்கனிஸ்தானுக்கு உரிமையே கிடையாது' என்று ஆப்கன்மீது பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது.

இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்கின்றனர்.

இராணுவ வகையில் பாகிஸ்தான்—அமெரிக்காவையும், ஆப்கனிஸ்தான் — ரஷ்யாவையும் சார்ந்திருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

'இரு அண்டை நாடுகளிடையேயும் ஏன் இந்தத் தகராறு'—என்பதற்கு, இங்கிலாந்தில் உள்ள ஆப்கன் தூதுவர் தந்துள்ள ஒரு விளக்கத்தைப் பதிலாகத் தருகிறோம்:—

"மலைப்பகுதியில் வாழும் பக்தூன்கள், 1947-ம் ஆண்டு வரை தங்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்காகவும், வருங்காலத்தை உருவாக்க சுயநிர்ணய உரிமைக்காகவும் போராடி வந்தனர். அதேபோன்று, வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும், பலுசிஸ்தானத்திலும் வாழும் மக்களும் தங்கள் தலைவர்கள் மூலம் கோரிக்கைகளை வற்புறுத்தினர்.

"பக்தூன்களின் விருப்பங்களை உணர்ந்த ஆப்கன் சர்க்கார், இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னமேயே — பாகிஸ்தான் பிரியுமுன்பாகவே, பர்மா, இலங்கை போல பக்தூன்களுக்கென பக்தூனிஸ்தானை அமைத்துத் தருமாறு திரும்பத் திரும்ப வற்புறுத்தி வந்தனர். இது ஐ. நா. சாசனத்திற்கும், மனித உரிமைகள் பிரகடனத்திற்கும் பொருத்தமான கோரிக்கையாகும்.

"ஆனால், இந்தக் கோரிக்கை பற்றி சுமுகமாகப் பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒரு முடிவுக்கு வர, பாகிஸ்தான் சர்க்கார் தொடர்ந்து மறுத்து வருகின்றனர்; அதன் விளைவே தகராறு.

"....பக்தூனிஸ்தான் இயக்கம் உண்மையான தேசிய இயக்கமாகும். எந்த அன்னிய ஆட்சியாலும் தோற்றுவிக்கப் பட்டதல்ல."

பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை அபிவிருத்தி

ரூ 15 கோடியில் திட்டம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மைசூரிலுள்ள பத்ராவதி இரும்பு—எஃகுத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்கென ரூ. 15.05 கோடி செலவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

'மத்திய ஆட்சியினர் பொறுப்பு ஏற்க வேண்டும்'

பிரதேச மொழி வளர்ச்சி பற்றி அமைச்சர் சுப்பிரமணியம்

"தற்போது எங்கு நோக்கினும் மொழிப் பிரச்சினை காணப்படுகிறது; 'பிரதேச மொழி வளர்ச்சியை, பிரதேச சர்க்காரே கவனித்துக்கொள்ள வேண்டும்' என்ற நிலை கூடாது; எவ்வாறு, நாடு முழுமையும் ஒரே மாதிரி வளர்ச்சியடைய வேண்டுமென்று திட்டக் குழுவை நிறுவியிருக்கிறார்களோ, அதே போன்று, எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் மத்திய சர்க்காரே பொறுப்பேற்று, திட்டமிட்டு வேலை செய்ய வேண்டும்,"

என்று, சென்னை கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், கோவையில் நடைபெற்ற இலக்கியக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னைக்கு அருகில்

செய்தித் தொடர்பு சாதனம்

வெளிநாடுகளுடன் செய்தித் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுவதற்காக, சென்னைக்கு அருகில் செய்தி ஒலிபரப்பு கருவி ஒன்றையும், செய்திச் சேகரிப்பு ஒன்றையும் நிறுவுவதற்கு மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

செங்குன்றத்துக்கு அருகிலுள்ள படையால்லூரில் 'செய்தி சேகரிப்பு' கருவி அமைக்கப்படும்; இதற்காக வேண்டிய நிலத்தை இந்திய சர்க்கார் வாங்கியுள்ளது.

கொரட்டூர் கிராமத்தில் செய்தி ஒலிபரப்பும் கருவி அமைக்கப்படும்; இதன் நிர்மாண வேலைகளுக்காக ரூ. 4 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தாலுகா அலுவலகங்கள்

வசதிகள் பல செய்யப்படும்

சென்னை, நவ. 9—

மாவட்ட ரெவினியூ நிர்வாக விசாரணைக் குழுவினர் தெரிவித்த சிபாரிசுப்படி, தாலுகா அலுவலகங்களில், மாலையில் வெகுநேரம் கழித்தும் வேலை செய்யவேண்டியிருக்கிறது என்பதால், அங்கு மண்ணெண்ணெய் விளக்குஉபயோகித்துக் கொண்டிருக்கின்றனர்; அதற்குப் பதிலாக மின்சார விளக்கு அமைக்கப்படும் என்று தெரியவருகிறது.

பொதுமக்கள் வசதிக்காக இந்த அலுவலகங்களில் ஒரு தங்குமிடம் அமைக்கவேண்டும் என்றும், அங்கு நாற்காலி முதலிய ஆசனங்கள் போடவேண்டும் என்றும் சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனராம்.

மேலும், அதிகாரிகள், கிராமங்களுக்கு அலுவலக நிமித்தமாக அடிக்கடி செல்லவேண்டியிருப்பதால் அங்கு சாவடிகள் அமைக்கவும், ஏற்கனவே உள்ள சாவடிகளைத் திருத்தி அமைக்கவும் சர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனராம்.

இந்தியமுழுமையிலும்,நடப்புநிதி ஆண்டில், ரூ. 40 இலட்சம் செலவில் புதிய முறை செக்குகள் ஏற்படுத்துவதற்கு அ. இ. கதர், கிராமக் கைத்தொழில் போர்டு தீர்மானித்திருக்கிறதாம்.

மதுவிலக்கு வெற்றி தரும் விதம்?

கோவை, நவ. 10—

"4,492 'காலன்' சாராய ஊறலும், 9 காலன் நாட்டுச் சாராயமும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டன; ஆனால், இவற்றைத் தயாரித்தவர்கள் யாரென்று தெரியவில்லை; இவை கைப்பற்றப்பட்டு நாசப்படுத்தப்பட்டன. இது மட்டுமின்றி, 1,505 காலன் சாராய ஊறலும், இந்த அளவை விடச் சற்றுக் குறைவான அளவு நாட்டுச் சாராயமும், மேலும்சில சாராய உற்பத்தி சாதனங்களும் கைப்பற்றப்பட்டன,"

என்று, கோவை மாவட்டக் கலெக்டர் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் இம்மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்குக் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை குறைந்து காணப்படுவதாகவும், கோவை மாவட்டத்தில் மதுவிலக்குச் சட்டம் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'கொள்ளேகாலம்— தமிழர் வசிக்கும் பிரதேசம்!'

'கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கக்கூடாது'

காங்கிரஸ் குழுவினர் கோரிக்கை

"கொள்ளேகாலம் தாலுகாவின் தென் பகுதியின் பெரும் பாகம் தமிழர்கள் வசிக்கும் பிரதேசமாக இருப்பதால், இப்பகுதியை கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கக்கூடாதென மாநில சர்க்காரையும் மத்திய சர்க்காரையும் கோருகிறோம்."

"திரு-கொச்சி மாநிலத்தின் சித்தூர் தாலுகாவில் தமிழர் வாழும் பகுதியை சென்னை மாநிலத்துடன் இணைத்துவிடுமாறு மாநில சர்க்காரையும், மத்திய சர்க்காரையும் கோருகிறோம்"

இவ்வாறு, கோவை மாவட்ட நிர்வாகக் குழுவினர் தீர்மானங்களின் மூலம் கோரியுள்ளனர்.

டால்மியா தந்த ஜாமீன் பத்திரங்கள்

மதிப்புக் குறைத்து நீதிபதி உத்தரவு

புதுடில்லி, நவ. 9—

ரூ. 2 கோடி வரை சர்க்கார் பணத்தை மோசடி செய்ததாகக் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட சேத் இராமகிருஷ்ண டால்மியாவிடம் ஒவ்வொன்றும் ரூ 25 இலட்சத்திற்கு இரண்டு ஜாமீன் பத்திரங்கள் வாங்கப்பட்டிருந்தன.

ஜாமீனில் வெளிவந்த டால்மியா, தன்னிடம் ஜாமீன் வாங்கப்பட்ட தொகை அதிகம் என்றும், அதனை ரூ 5 இலட்சமாகக் குறைக்கவேண்டும் என்றும் கோரி நீதிமன்றத்தில் மனு செய்தார். அதனை ஒட்டி நீதிபதியும் ஜாமீன் தொகையை அவ்வாறே குறைத்து உத்தரவிட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

தென்னாப்பிரிக்க சர்க்காரின் பூச்சாண்டி

ஐ. நா.-விலிருந்து பிரதிநிதியைத் திரும்பப்பெறும் போக்கு

நியூயார்க், நவ. 9—

ஐ. நா. தனி அரசியல் குழு, தென்னாப்பிரிக்க இன ஒதுக்கல் சிக்கலை அடுத்த ஓராண்டிற்கும் பரிசீலிப்பது என்று முடிவு செய்ததை ஒட்டி, தென்னாப்பிரிக்க சர்க்கார் தனது நிரந்தரப் பிரதிநிதியையும், தூதுக் குழுவையும் ஐ. நா பொதுச் சபையிலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறதாம்.

தென்னாப்பிரிக்கப் பிரதிநிதிகள் சபையிலிருந்து வெளியேறியபோது இதர பிரதிநிதிகள் எல்லாம் ஆச்சரியத்தால் நிலை நின்று போய்விட்டனராம்!

பிரிட்டன் கைப்பற்றிய பாலைவனச் சோலை

ஐ. நா.-வில் புகார் தாக்கல்

அரேபியாவில் உள்ள 'புரைமி' என்ற பாலைவனச் சோலையை, தனது பாதுகாப்பில் பிரிட்டன் எடுத்துக்கொண்டு விட்டது.

இந்த நடவடிக்கையை சவூதி அரேபியா எதிர்ப்பதுடன், அப்பகுதி தனக்குச் சேர வேண்டுமென்றும் வற்புறுத்தி வருகிறது.

இப்போது, இத்தகராறை, ஐ நா. பாதுகாப்புக் கவுன்சிலின் பரிசீலனைக்கு சமர்ப்பித்துள்ளதாக 'அரபு லீக்' உறுப்பினர் நாடுகளுக்கு சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

இப்பிரச்சினையில், அரபு நாடுகள் கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், பிரிட்டன்—சவூதி அரேபியாவுக்குமிடையே இசசிக்கல் சுமுகமாகத் தீர்க்கப்படுமென்ற நம்பிக்கைசீர்குலைந்துவிட்டதென்றும் கூறப்பட்டுள்ளது.

இந்திய எஞ்சினியர் லண்டனில் கொலை

லண்டன், நவ 9—

இங்கு இந்திய மாணவர் ஒருவரைக் கொலை செய்து அவரிடமிருந்து பணம் கொள்ளையடித்ததாக 22 வயதான 'எஞ்சினியர்' ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கடந்த நவம்பர் 6 அல்லது அதை ஒட்டிய நாளில், குறிப்பிட்ட முகவரி இல்லாது வாழ்ந்து வரும் பாட்ரிக் அந்தோனியோ மைக்கேல்ரோஸ் என்ற அந்த எஞ்சினியர், ஆகன்ச் சந்திர தத் என்ற இந்திய மாணவரை ஒரு அறையில் சந்திக்குமாறு தந்திரமாகத் தருவித்து, தத்தாவை அடித்துக் கொன்று, அவரிடமிருந்த ஏராளமான பணத்தைக் கொள்ளையடித்ததாகப் போலீசார் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

கொலையுண்ட தத்தா, அசாமைச் சேர்ந்தவர் என்றும், திருமணமாகாதவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தத்தா மரணம் குறித்து அசாம் சர்க்காருக்கு தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத் திட்ட உதவியுடன், தத்தா, கனடாவில் கடந்த ஜுலை முதல் மின்சாரத்துறை பற்றிய கல்வி பெற்றுவிட்டுத் தாயகம் திரும்பிக்கொண்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது.

தத்தா கொலை செய்யப்பட்டது கேட்டு, கனடா கொழும்பு திட்ட அதிகாரிகள் அதிர்ச்சியுற்றனராம்.

அசாம் மாநிலத்தில் கொழும்பு திட்டப்படி நிறைவேறிவரும் ஒரு திட்டத்தில், தத்தா ஒரு பிரிவின் பொறுப்பேற்கும் எஞ்சினியராக நியமிக்கப்படவிருந்தாராம்.

---

10 திங்களில் 22,000 பேர் வெளியேறினர்!

இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் அலுவலகத் தகவல்

கொழும்பு, நவ. 10—

"1955 அக்டோபர் திங்கள் 31-ந் தேதி முடிய உள்ள 14 திங்கள் காலத்தில், இலங்கையிலிருந்து இந்தியா சென்றோரின் தொகை 21,500-க்கும் அதிகம்,"

என்று, இங்குள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தார் அறிவிக்கின்றனர்.

இவர்களில் 14,000 பேர் தாங்களாகவே வெளியேறியவர்கள் என்றும், இதரர், 'வெளியேறு' என்று இலங்கை சர்க்கார் பிறப்பித்த நோட்டீசிற்குப் பின் வெளியேறியவர்கள் என்றும், கூறப்படுகிறது.

இந்தியர்களை, 'வெளியேறுங்கள்' என்று கடந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் தங்கள் திட்டப்படி இலங்கை சர்க்கார் 'நோட்டீஸ்' பிறப்பித்து வருகின்றனர். அதிலிருந்து ஒவ்வொரு திங்களும், 1,500 பேர் வீதம் இந்தியர்கள் வெளியேறி வருகின்றனர்,

இலவசக் கல்வி — பகல் உணவு அளிக்க முயற்சி

பத்தாம் படிவம்வரை புதிய சலுகை

கல்வித் துறைத் தலைவர் அறிவிப்பு

"எஸ். எஸ். எல். சி. வரையில் மாணவர்களுக்கு இலவசக் கல்வியும், இலவசப் பகல் உணவும் அளிப்பதற்கு சென்னை அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது; நடைமுறையில் இத்திட்டத்தைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன; மற்ற மாநிலங்களில் நடக்காதவை இம்மாநிலத்தில் நடைபெறுகின்றன."

என்று, விருதுநகரில், பொறியியல்—செயல் இயல், கல்வித் துறைப் புதுக் கட்டிடங்களுக்கு அடிப்படைக்கல் நாட்டுகையில், சென்னை மாநில கல்வி இலாகா அதிகாரி திரு. சுந்தரவடிவேலு அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னார்:—

"சென்னை மாநிலத்தில், கல்வித் துறை நிறுவப்பட்ட பின், நூறாண்டு காலத்தில்—இதுவரையில் ஒரு தமிழனாவது கல்வித் துறை அதிகாரியாக (டைரக்டரா) நியமிக்கப்படவில்லை.

"இன்று, தமிழனுடைய பெருமை உலகெலாம் பரவிவிட்டது. மக்களுக்கு மொழிப் பற்று ஏற்பட்டு ஆகவேண்டும்.

"கல்வி கற்பது பாடங்களை மனப்பாடம் செய்து திரும்ப ஒப்பிப்பதற்காக அல்ல. மொழி, கணக்கு, வரலாறு, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் மாணவர்களைத் திறமைசாலிகளாகச் செய்யும் முறையில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் போதிக்கவேண்டும்; இன்று, மக்களாட்சி நடைபெறுவதால், அவர்கள் கருத்துக்குகந்த முறையில் கல்வி போதிக்கப்படவேண்டும்; நம்மிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிப்படுத்தும்படியாக அக்கல்வி இருக்கவேண்டும்.

"உத்தியோகங்களைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் படிக்கக்கூடாது; இன்று பல நூதனத் தொழில் நுணுக்கங்களைக் கண்டு பிடித்தவர்கள், மாணவர்களே யாவர் என்பதை நினைவிலிருத்த வேண்டும்.

"ஏழைகளுக்குக் கல்வி புகட்டுவதற்கும் பணம் படைத்தோர் முன்வரவேண்டும். ஏழைகள் படித்து, அறிவாளிகளாகத் தோன்றினால்தான், நாட்டிற்கு நன்மை ஏற்படும்."

தூத்துக்குடி துறைமுக வளர்ச்சி

ரூ. 1½ கோடி. செலவிடப்படும்?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இந்தியத் துறைமுகங்களின் வளர்ச்சிக்காக ரூ 5 கோடி செலவிடப்படவிருக்கிறதல்லவா? இத்தொகையில், சுமார் ரூ. 1½ கோடி தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிக்காகச் செலவிடப்படுமென்று நம்பப்படுகிறதாம்.

கப்பல் போக்குவரத்துக்குரிய வசதிகளைச் செய்து தருவதற்காக மன்னார் வளைகுடாவையும், பாக். ஜலசந்தியையும் இணைக்கும் மத்திய திட்டத்துடன், தூத்துக்குடி துறைமுக வளர்ச்சியும் ஒரு சில அம்சங்களில் தொடர்பு கொண்டிருக்குமாம்!

அதிசய ஆமை!

சென்னை மிருகக் காட்சி சாலையின் நூற்றாண்டு விழாவுக்காக மைசூரிலிருந்து 220 இராத்தல் எடையுள்ள மிகப் பெரிய ஆமையொன்று தருவிக்கப்பட்டுள்ளது.

180 வயதுள்ள இந்த ஆமை, நூற்றாண்டு விழா முடிவுற்றதும் மீண்டும் மைசூருக்கே சென்றுவிடும்.

பெரான் ஆதரவாளர்கள்

புதிய தலைவரைக் கேலி செய்தனர்!

பியூனஸ் அயர்ஸ், நவ. 9—குதிரைப் பந்தயம் ஒன்றைக் காண வந்த அர்ஜெண்டைனாவின் புதிய குடியரசுத் தலைவர் யெதுயார்டோ லொனார்டியை, முன்னாள் தலைவர் பெரானின் ஆதரவாளர்கள் 'விசில்' அடித்தும், கைகொட்டிச் சிரித்தும், கல்லெறிந்தும் கேலி செய்தனர் என்று செய்தி ஒன்று கூறுகிறது.

லொனார்டிக்கு முன்பாக, குதிரைப் பந்தய மைதானத்திற்கு வந்த குடியரசுத் துணைத் தலைவர் அட்மிரல் ஐசக் ரோஜாஸ் என்பாரையும் பெரான் ஆதரவாளர்கள் இம்மாதிரி கலாட்டா செய்ததுடன் 'வெளியே போ' என்று வேறு குரல் எழுப்பியிருக்கின்றனர்.

பின்னர், பிரதான பந்தயம் துவங்கு முன்பு லொனார்டி வந்தார்; அவரையும் கிண்டலும், கேலியும் செய்தே பெரான் ஆதரவாளர்கள் வரவேற்றிருக்கின்றனர்.

பின்னர், பந்தய மைதானத்திற்குள் ஏராளமாகக் கூடி நின்று, அவர்கள், 'பெரான், பெரான்' எனக் குரல் கொடுத்திருக்கின்றனர்; சிலர், கல்லெறிந்து 'விளையாட, முற்பட்டனராம்.

உடனே போலீசாரும், தீயணைக்கும் படையினரும் வரவழைக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நீரைச் சொரிய தீயணைக்கும் படையினர் முற்பட்டனர்; ஆனால், பெரான் ஆதரவாளர்கள் நீர்க் குழாயை வெட்டி விட்டதால் அவ்வாறு செய்ய முடியாது போயிருக்கிறது.

உடனே அவர்கள் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்வதைத் தவிர வேறு வழியில்லாது போய் விட்டதாம்.

இந்தியாவில் எண்ணெய் உற்பத்தி

ரஷ்யா வழங்கும் தொழில் நுணுக்க உதவி

கல்கத்தா, நவ 9—இந்தியாவில் எண்ணெய் உற்பத்தி, வளம் இவற்றிற்கு தொழில் நுணுக்க உதவி செய்வதாக ரஷ்யா தெரிவித்திருந்ததை ஒட்டி, இந்தியா, சில நிபுணர்களை ரஷ்யாவிற்கு அனுப்பி, ரஷ்யமுறை இந்தியாவிற்கு எவ்வளவுதூரம் பயன்பட முடியும் என்பதைக் கண்டறிந்து வரத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வெய்யிலின் சக்தியால் மின்சார நிலையம்

ரஷ்யாவின் திட்டம்

வெய்யிலின் சக்தியைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான பெரிய மின்சார உற்பத்தி நிலயத்தை ஏற்படுத்துவதற்கு ரஷ்யா திட்டம் வகுத்து வருகிறதாம்!

வெய்யிலின் சக்தியை நேரடியாக மின்சார சக்தியாக மாற்றுவதற்கென சாத்தியக் கூறுகள் பற்றி, தற்போது ரஷ்ய நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

பாட்னாவில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம்

போலீசுக்கு அதிகாரம் அளிக்கவில்லையென மாஜிஸ்திரேட் சாட்சியம்

பாட்னா, நவ. 9—ஆக. 13-ந் தேதியன்று பாட்னாவில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு அனுமதி தரப்படவில்லை என்று, விசாரணை குழுவின்முன் பாட்னா மாவட்ட மாஜிஸ்திரேட் கூறியுள்ளார்.

கூட்டத்தில் கல் வீசியபோது, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்வதற்கு மட்டும் சீனியர் போலீஸ் சூப்பிரண்டெண்டெண்டு போலீசாருக்கு உத்தரவு அளித்தது தான் தனக்குத் தெரியும் என்று அவர் கூறினார்.

தொழிலாளர் வாழ்வில் 'புது யுகம்' பிறக்கிறதாம்!

கொள்கை வேறுபாடுகள் மறைந்து 'கூட்டுச் சங்கம்' உருவாகிறதாம்

வாஷிங்டன், நவ. 9—"அமெரிக்கத் தலைவரின் மாளிகைக்கு எதிரே மிகப் பெரிய கட்டிடம் ஒன்று எழும்புகிறது. அது, புதிய மாபெரும் அமெரிக்கத் தொழிற் சங்கத்தின் தலைமையகமாய் விளங்கப் போகின்றன. ஒரு கோடி உறுப்பினரைக் கொண்ட அமெரிக்கத் தொழிலாளரின் கூட்டுச் சங்கமும், 50 இலட்சம் உறுப்பினரைக்கொண்ட தொழிற்சங்கக் காங்கிரசும் இணைந்து ஒரே சங்கமாக அக்கட்டிடத்தில் செயலாற்றும்" என்று கூறப்படுகிறது.

"இணைப்பு வேலை முற்றும் செய்யப்பட்டாயிற்று; புதிய அமைப்புச் சட்டமும் எழுதியாயிற்று; முதன்மையான பதவிகள் குறித்தும் ஒருமைப்பாடு ஏற்பட்டாயிற்று; இனி டிசம்பர் மாதத் தொடக்கத்தில் பிரதிநிதிகள் கூடி இரண்டு சங்கங்களையும் ஒழித்துவிட்டு, ஒற்றுமைப்பட்ட புதிய சங்கத்தை உருவாக்கவேண்டும். அப்பொழுது அமெரிக்கத் தொழிலாளருக்கு ஒரு புது யுகம் பிறக்கும்" என்று அறிவிக்கப்படுகிறது.

இன்றையத் தொழிற் சங்க நடைமுறைக்கு இணங்க இணைப்பு ஏற்படுகிறது. இருபதாண்டுகளுக்கு முன் இருந்த கொள்கை வேறுபாடுகள் இன்று மறைந்துவிட்டன. அன்று, சங்கம் இரண்டாகப் பிரிந்ததற்குக் காரணமாயிருந்தவை இன்று இல்லையாம்.

தேர்தலில் தொழிலாளர் இன்ன கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமென்று தொழிற் சங்கங்கள் சொல்வதில்லை. தொழிற் சங்கம் தன் கட்சி அபேட்சகர்களை நிறுத்துவதுமில்லை. தொழிற் சங்கங்கள் இன்ன கட்சியைத்தான் தொழிலாளர் சேர்தல் வேண்டுமென்றும் சொல்வதில்லை. அமெரிக்கத் தொழிலாளருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மற்ற வாக்காளரைப்போல தங்களது விருப்பமான அபேட்சகருக்கு வாக்களிக்கும் சுதந்தரம் உண்டென்று பெருமையாகக் கூறப்படுகிறது.

இந்த இணைப்புக்குப்பின் ஒற்றுமைப்பட்ட தொழிற் சங்கம், தொழிலாளருக்குச் சார்பான சட்டங்கள் நிறைவேற்றப்படுமாறு முனைந்து வேலை செய்யும். சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இன்னும் நன்முறையில் நடைபெறவும் அது வேண்டுவன செய்யும். கூட்டுப் பேர நடைமுறையிலும் அதன் ஆற்றல் விளங்கும். இந்த இணைப்பால் தொழிலாளருக்கு இன்னும் பல நலன்கள் விளையும் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறது.

செய்திச் சுருள்

★

விருதுநகர் வி.வி.இராமசாமிபடிப்பகம்

6—11—55 மாலை 5 மணிக்கு வி. வி. ஆர். படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் கே. ரத்தினசாமி தலைமையில் நடைபெற்றபோது, படிப்பக 2-வது ஆண்டு விழாவின் வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் தோழர்கள் எம். சுந்தரராஜ், எம். சங்கையா, கே. ரத்தினசாமி, ஆர். பெரியசாமி, எஸ் ஆசீர்பாதம் ஆகியோரை, முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இறுதியில் படிப்பகத்துக்குச் சொந்தக் கட்டிடம் தேவைப்படுவதையொட்டி, ஆதரவாளர்களிடமும் அனுதாபிகளிடமும் நிதி வசூல் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கழகச் செய்திகள்

★

புதுவை தி. மு. கழக வட்டக் குழு

நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

புதுவை ஆலைகளில் வேலை செய்து ஓய்வு பெற்று வந்த தொழிலாளர்களுக்கு வழக்கப்படி தரப்பட்டுவந்த உதவி நிதியை (பென்ஷன்) ஆலை முதலாளிகள் எவ்விதக் காரணமும் காட்டாமல் நிறுத்திவிட்ட அடாத போக்கினை வன்மையாகக் கண்டித்தும், அரசியலார் இந்த விஷயத்தில் தலையிட்டு, தொழிலாளர் உதவி நிதி பற்றி ஒரு முடிவு செய்வதற்காகக் கூடிய 'ஆர்பிட்ரேஷன்' குழு ஒரு முடிவு தெரிவிக்கும் வரை ஓய்வு பெற்றத் தொழிலாளருக்கு உதவி நிதி கிடைத்துவரும்படி செய்யக் கேட்டுக்கொண்டும் புதுவைப் பகுதி திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதுடன், புதுவை வட்ட தி மு கழகக் குழு துண்டுப் பிரசுரமும் வெளியிட்டுள்ளது.

ஆம்பூர் நகர தி. மு. க.

30—10—55ல் கழக இல்லத்தில் தோழர் எ. ஜி. சாமி தலைமையில் நடைபெற்ற நகரக் கிளைச் செயற்குழுக் கூட்டத்தில் 16, 21—10—55-ந் தேதிகளில் நடைபெற்றப் பொதுக் கூட்ட வரவு-செலவு சரிபார்க்கப்பட்டது. பின்னர், தோழர் ஈ. எம். கிருஷ்ணையா சொற் பயிற்சிக் கூட்டத்தைத் துவக்கிவைத்தார். தோழர்கள் ஆர். சம்பங்கி, என். கணேசன், ஜி. அரசு, எ. ஜி சாமி, எஸ். அண்ணாமலை, டி எஸ். இராமமூர்த்தி, வி. கே கேசவன் ஆகியோர் பேசினர்.

கூடலூர் (ஓ. டி.) தி.மு.க.

6–11–55 காலை 10 மணியளவில் கழகக் கட்டிடத்தில், நகர தி. மு க. செயலாளர் தோழர் கே. இளங்கோ தலைமையில் நடைபெற்ற கிளைக் கழக நிர்வாகிகள் தேர்வுக் கூட்டத்தில், செயலாளர் கி. கோவிந்தராசன் அவர்களின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரது கழகப் பணிக்காக நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின்னர், தோழர்கள் அ. கந்தசாமி, சி. துரைராசு, ஜே வி. நாயகம் ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

திமிரியில் தி. மு. கழகத் துவக்கம்

16—10—55ல் திமிரியில் (வட ஆ மாவட்டம்) தோழர் இராம-இரங்கண்ணல் தலைமையில் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் இராம-அரங்கண்ணல் கிளைக் கழகத்தைத் துவக்கி வைத்து கழகக் குறிக்கோள் குறித்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர், கிளைக் கழக நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கொட்டாம்பட்டியில் தி.மு. கழகத் துவக்கம்

7—11—55 மாலை 6 மணிக்கு, மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டியில், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ் முத்து அவர்களால் கிளைக் கழகம் துவக்கப்பட்டு, மன்றைத் திடலில் கழகக் கொடியும் ஏற்றுவிக்கப்பட்டது தோழர்கள் எஸ் முத்து, கே. எஸ். சந்தானம், எம். முத்துராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை டாக்சி, ஜட்கா, கைவண்டி, ரிக்ஷா லேபர் யூனியன்

8—11—55 மாலை 5 மணிக்கு, தோழர் எ இரத்தினம் எம். எல். ஏ, தலைமையில் நடைபெற்ற மேற்படி யூனியன் பொதுக் குழு கூட்டத்தில், திரு. எம். சுந்தரராஜ் எம்.சி. யூனியனின் முக்கியத்துவம், தொழிலாளர் ஒற்றுமை, சென்னை நகரில் ரிக்ஷா, ஜட்கா, ஆட்டோ ரிக்ஷா, டாக்சி, கைவண்டித் தொழிலாளர்கள் நிலைமை முதலியவைகளைப் பற்றி விளக்கவுரை ஆற்றினார். மற்றும் தோழர்கள் எ. அருணாசலம், கோவிந்தசாமி, எம். ஆர்.பச்சையப்பன், பாலகிருஷ்ணன் ஆகியோரும் பேசினர். பின்னர், மேற்படி யூனியன் சட்ட திட்டங்கள் வாசிக்கப்பட்டு, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன், டிரேட் யூனியன் சட்டப்படி அச்சங்கத்தைப் பதிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், மேற்படி தொழிலாளர்கள் முன்னேற்றத்துக்கு சர்க்கார் ஒரு குழுவை நியமித்து, அதன் சிபாரிசுப்படி ஆவன செய்ய கேட்டுக்கொண்டும், ரிக்ஷா வண்டி, கைவண்டித் தொழிலாளருக்கு நிரந்தரமான வருமானமுள்ள தொழிலை அரசாங்கம் அடையச் செய்யும் காலம் வரை சென்னையில் ரிக்ஷாக்களை அப்புறப்படுத்தக் கூடாது என்று வற்புறுத்தியும், வண்டிகளுக்குக் குறைந்தபட்ச குடக்கூலியை உடனடியாக நிர்ணயிக்கவேண்டும் என்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வேலாயுதம் நினைவு நாள் விழா

7—11—55 மாலை 6 மணிக்கு செயங்கொண்டம் தி. மு கழகச் சார்பில், ஆசிரியர் வேலாயுதம் நினைவு நாள் விழாப் பொதுக்கூட்டம் காந்தி பூங்கா அருகில் திரு. அ. மெத்துசலா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் லா. க. இராமலிங்கம், கோ. சிவபெருமான், அ. சலாம், டி. கே. திராவிடமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டத்தில், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அழகிரி நினைவுப் படிப்பக துவக்கம்

6—11—55 மாலை 5 மணியளவில், சென்னை வண்ணையம்பதி எண். 8 நரசய்யர் தெருவில் 'அழகிரி நினைவுப் படிப்பகத்'தைத் தோழர் பி. வி. எஸ் பாபு தலைமையில் தோழர் கணேசன் துவக்கி வைத்தார். பல இயக்கத் தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

பிறப்பு

7—11—55-ல், சத்திரப்பட்டி தி மு கழகத் துணைச் செயலாளர் தோழர் க அண்ணாமலை அவர்களது துணைவியார் பெண் மகவு ஒன்றுக்குத் தாயானார்; தாயும் சேயும் நலம்.

பக்கிங்காம்-கர்னடிக் ஆலை தொழிலாளர்கள்

நிர்வாகிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிவு ?

சென்னை, நவ 10—

பி. அண்டு சி. மில் தொழிலாளர்கள் சார்பில், தோழர்கள் எஸ். சி. சி. அந்தோணியும், எஸ். பக்கிரிசாமியும், சர்க்கார் காரியாலயத்தில் இன்று தொழிலாளர் இலாகா அமைச்சரைச் சந்தித்து, தொழிலாளருக்கும் — நிர்வாகிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள தகராறுகள் பற்றி நடைபெற்ற நேர்முகமான பேச்சுவார்த்தையில், இருதரப்பினரும் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என்று தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

தகராறுகள் சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வருமுன், தங்கள் கட்சியையும் கேட்கும்படி மில் நிர்வாகிகள் சார்பில் அமைச்சரிடம் கோரப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது

இது சம்பந்தமாக நவ. 12-ந் தேதியன்று தன்னைச் சந்திக்குமாறு இரு தரப்பினரையும் தொழில் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

மில் தொழிலாளர் மோதுதல் எதிரொலி

போலீசார் சோதனை : 27 - பேர் கைது

கோவை, நவ. 10—

கடந்த திங்கட்கிழமையன்று, சிவானந்தா ஆலை எதிரில், தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பையொட்டி, கோவை, சிங்காநல்லூர், பீளமேடு ஆகிய இடங்களிலுள்ள கம்யூனிஸ்டுகட்சி, ம. சோ. கட்சி தொழிலாளர் சங்கங்களைப் போலீசார் சோதனையிட்டு, கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் 23 பேரையும், ம. சோ. கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் 4 பேரையும் கைது செய்துள்ளனராம்.

இரண்டு போட்டி யூனியன்களைச் சேர்ந்த ஆலைத் தொழிலாளர்கள் சந்தா வசூலிக்கையில் ஏற்பட்ட மோதுதல் காரணமாக ஒருவர் இறந்தார்—ஒன்பது பேருக்குக் காயம் ஏற்பட்டது.

சொற் பயிற்சிக் கூட்டம்

13-11-55 மாலை 6-30 மணிக்கு, சென்னை-இராயபுரத்திலுள்ள வட சென்னை தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்ற இல்லத்தில், தோழர் இ. அன்பானந்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. ஜே. இராபர்ட், மா கனிச் சொல்லன், எஸ். பாலன் ஆகியோர் பேசுவர்.

மன்னார்குடி தாலுகா தி.மு.க. (கிளை) செயலாளர்கட்கு

13—11—55 பகல் 1 மணிக்கு மன்னார்குடி வட்ட தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டம், தோழர் ப. நாராயணசாமி இல்லத்தில், தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நகர இளைஞர் கழகம்

13-11-55 காலை 10 மணிக்கு, மேற்படி கழகச் சார்பில், சுகாதார ஊர்வலம் ஒன்று, சென்னை-சூளை, டிமலஸ் ரோடிலுள்ள குமாரசாமி ராஜபுரத்திற்குச் சென்று சுகாதார பணியாற்றும். அவ்வமயம், மக்களுக்கு பால் வழங்கப்படும். திரு. ஏ. பி. பாலசுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.

14—11—55 காலை 9 மணிக்கு, சென்னை-சூளை, டிமலஸ் ரோடிலுள்ள இந்து யூனியன ஆரம்பப் பள்ளியில், மேற்படி கழகச் சார்பில், 'ஐ நா. சிறுவர் தினம்' கொண்டாடப்படும் தோழர் சுரதா அவர்கள் சிறுவர்களுக்கு சில பாடல்கள் கற்றுக்கொடுப்பார். திரு பி. பாலகோபால் சொற்பொழிவாற்றுவார். சிறுவர்கட்கு இனிப்புப் பண்டம் வழங்கப்படும்.

4,000 பேருக்கு வேலைதரும் காகிதக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை

ரூ.20 கோடி மூலதனத்தில் துவக்கம்

எர்ணாகுளம், நவ 10—

தினம் 100 டன் வரை காகிதக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று, திரு-கொச்சியில் சீக்கிரமே நிறுவப்படவிருக்கிறது என்று தெரிய வருகிறது.

இந்தியாவிலேயே இந்தத் தொழிற்சாலை முதலாவது என்றும், இந்தியாவின் முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியதாக இது இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இப்போது, காகிதம், ரேயன் முதலியவை உற்பத்திக்குத் தேவையான கூழ், நார்வே, சுவீடன் போன்ற இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இந்த தொழிற்சாலையை திருவாங்கூர் ரேயன் என்ற நிறுவனத்தார் துவக்குவர் என்றும், இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான சுமார் ரூ 20 கோடி மூலதனத்தில் 20 முதல் 25 சதவிகிதம் வரை சர்க்கார் பங்கீடு பெறுவர் என்றும் கூறப்படுகிறது.

இந்த தொழிற்சாலை சுமார் 4,000 பேர்களுக்கு வேலைதரும் என்று கூறப்படுகிறது.

அரபு நாடுகளுக்கு ரஷ்ய ஆயுத உதவி

பிரிட்டிஷ் பிரதமர் கொதிப்பு

லண்டன், நவ. 10—

"அராபிய நாடுகளுக்குள் கம்யூனிசம் சுலபமாக நுழைவதற்காகவேதான், ரஷ்யா, அரபு நாடுகளுக்கு ஆயுதங்களைப் பகிரங்கமாகத் தந்து வருகிறது," என்று, பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஜினீவா நல்லுணர்வுடன் சோவியத் யூனியன் கெடுபிடிப் போரை நிறுத்தப் பாடுபடுகிறது என்று கூறப்படுவதை, அரபு நாடுகளுக்கு ஆயுதங்கள் வழங்கும் செயலைக்கொண்டு பார்த்தால் நம்மால் ஏற்றுக் கொள்ளுவதற்கில்லை" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'அராபிய நாடுகளுக்கும்—இஸ்ரேலுக்கும் இடையில் ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்வதற்கு பிரிட்டன் முயற்சிக்கும். கடந்த ஆகஸ்டு திங்களில் அமெரிக்க வெளிவிவகார இலாகா மந்திரி டல்லஸ் தந்த திட்டத்தினாலேயே இரு தரப்புகளுக்குமிடையில் சமரசம் செய்து வைக்க முடியும்' என்று கூறிய ஈடன், 'ரஷ்யாவின் தந்திரங்களுக்கு இலக்காகி விடுவார்களேயானால், கம்யூனிச ஆதிக்கத்திற்கு உட்படுமாறு ரஷ்யாவினால் அச்சுறுத்தப்படுவர்' என்று அராபிய நாடுகளுக்கு எச்சரிக்கையும் விடுத்தாராம் !

மேற்கு பாகிஸ்தான் தேர்தல்கள்

கால வரையறையின்றி ஒத்திவைப்பு

கராச்சி, நவ. 10—

ஒன்றாக இணைக்கப்பட்ட மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தில் பொதுத் தேர்தல்கள் இன்னும் இரண்டு கிழமைகளில் நடைபெறுவதாக இருந்ததை காலவரையறை இன்றி ஒத்திவைத்துவிட்டனர் என்று தெரியவருகிறது.

தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இன்று நடைபெற்றிருக்க வேண்டிய தேர்தல்கள், முதலில் நவம்பர் 22-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டன; இப்போது, அவை மீண்டும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

அணுசக்தி நீர்மூழ்கி

பிரிட்டனும் நிர்மாணிக்கிறது

அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கி ஒன்றை பிரிட்டனும் நிர்மாணித்து வருவதாகக் கடற்படை அதிபர் மவுண்ட் பாட்டன் பிரபு, நியூயார்க்கில் கூறியுள்ளார்.

சூடான் பிரதமர் இராஜினாமா

கார்ட்டூம், நவ. 10—

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின்போது, பார்லிமெண்டில், சூடான் சர்க்கார் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து சூடான் பிரதமர் இராஜினாமா செய்துவிட்டார்.

புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்குமாறு பார்லிமெண்டை, கவர்னர்-ஜெனரல் கேட்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

காஞ்சீபுரம் நகர சபைத் தலைவர் தேர்தல்

காஞ்சீபுரம், நவ. 10—

காஞ்சீபுரம் நகரசபைத் தலைவராக சுயேச்சையாளரான வி. என் பெருமாள் என்பார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சிச் சார்பில் ஏ. பாலகிருஷ்ணன் போட்டியிட்டு தோல்வியுற்றார்.

நகரசபையில் மொத்தம் உள்ள 32 இடங்களில், 20 இடங்களைக் கைப்பற்றி, காங்கிரஸ் பெருவாரியாக இருந்தும்கூட, காங்கிரஸ் நிறுத்திய அபேட்சகர் தோல்வியுற்றிருக்கிறார்.

காங்கிரஸ் அபேட்சகருக்கு 13 வாக்குகளும், சுயேச்சை அபேட்சகருக்கு 16 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

முன்னாள் தலைவரான எஸ். எல்லப்ப (முதலியார்) கூட்டத்திற்கு வரவில்லை. 31 உறுப்பினர்களே வந்திருந்தனர்.

தோழர்கள் ஏ. கே. தங்கவேலு (முதலியார்), சி. வி. எம். அண்ணாமலை, கே. எஸ் பார்த்தசாரதி ஆகியோர் புதிய தலைவரைப் பாராட்டிப் பேசியிருக்கின்றனர்.

கோவாவில் கொல்லப்பட்டோரின் குழந்தைகள்

பராமரிப்புக்காக ஆஸ்திரேலியர் நிதி உதவி

சிட்னி, நவ. 9—

கோவா 'சத்தியாக்கிரகத்'தின் போது கொல்லப்பட்டவர்களின் குழந்தைகளின் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் 50 பவுன் வீதம் 5 ஆண்டுகளுக்குத் தந்து உதவுவதற்கு, இராணி எலிசபெத்தை ஆதரவாளராகக் கொண்ட 'குழந்தைகள் காப்பாற்றும் நிதி' இயக்கத்தவர் முன் வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

மேலும், அந்தச் சங்கத்தினர், சென்னையில் உள்ள சேவா சமஜ சிறுவர் இல்லத்தை விரிவுபடுத்தி அமைப்பதற்கென 1,400 பவுன் 'செக்' ஒன்றை ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியத் தூதுவரிடம் தந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மேலும் கல்கத்தாவில் உள்ள ஒரு பள்ளிக்கும் நிதி உதவி வழங்க அந்த இயக்கத்தவர் முன்வந்திருப்பதாயும், சுமார் 50 குழந்தைகளுக்கு 5 ஆண்டுகளுக்கு இலவசமாக உணவளித்து வளர்க்கவும் சம்மதித்திருப்பதாயும் தெரிய வருகிறது.

****

திராவிட மாணவர் முன்னேற்ற கழக 2-வது மாநில மாநாடு

சென்னையில் டிசம்பர் திங்களில் கூடுகிறது

★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், புது முறுக்கோடு—மறுமலர்ச்சியுடன் பணியாற்ற வேண்டிய கட்டம். அதற்கு வேண்டிய திட்டத்தைத் திறமையோடு தீட்டவும், தியாகத் தீயில் குளிக்கவும் நம்மிடையே உள்ள தீரர்கள் ஏராளம்.

மாணவர் மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைக்கும் வாய்ப்பினை சென்னை திராவிட மாணவர் பெற்றிருக்கின்றனர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாட்டு வரவேற்புக் குழு, சென்னை-இராயபுரம் 'அறிவகத்'தில், 13—11—55 காலை 10 மணிக்கு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் பணியில் அக்கரை கொண்டோர்—அன்பு கொண்டோர், அத்தனை மாணவரையும் 13-ந் தேதி காலை 10 மணிக்கு 'அறிவகத்'திற்கு வருகை தருமாறு அன்புகுழைந்து வேண்டிக்கொள்கிறேன்.

எல்லாக் கல்லூரிகள் மட்டுமல்ல —உயர்நிலைப் பள்ளிகள், தொழிற் கல்லூரிகள் (சட்டக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் போன்றவைகள்) அனைத்தும் குறைந்தது 2 பிரதிநிதிகளையாவது அனுப்பி, மாணவர் கழகம் வலிவும் பொலிவும் பெற கருத்துக்கள் நல்கி ஒத்துழைக்க அருள்கூர்ந்து வேண்டுகின்றேன்.

13—11—55 ஞாயிறு காலை 10 மணி

'அறிவகம்'—இராயபுரம்—சென்னை

திராவிட மாணவர்கள் நமது விடுதலைப் பட்டாளத்தின் முதல் வரிசையினர் !

அந்தப் பெருமைக்கேற்ற பெற்றி நம்மிடம் உண்டு என்பதை நிரூபிக்கத் தவருதீர் !

அன்பன்,

கே. ஏ. மதியழகன்

****

கழகக் கூட்டங்கள்

★

கீழ திருப்பாலக்குடி
தி. மு. கழகத் துவக்க விழா
13—11—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: என். அருணாசலம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
ப. நாராயணசாமி
து. தியாகராசன்
கோ. சிவஞானம்

★

கள்ளக்குறிச்சி
வள்ளுவர் திடலில்
13—11—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: மு. பாண்டியன்
பேசுபவர் :
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

சென்னிமலை
குமரன் சதுக்கத்தில்
14-11-55 மாலை 6½ மணிக்கு
பேசுபவர்:
இரா. நெடுஞ்செழியன்

★

குறும்பலாப்பேரி
சௌந்திரபாண்டியனார் திடலில்
(அம்மன் கோயில் முன்பு)
14-11-55 இரவு 8 15 மணிக்கு
தலைவர் : வே. போ. தங்கம்
பேசுபவர் :
சி. பி. சிற்றரசு

அருணாசலம் நினைவு மன்றத் துவக்க விழா

★

13—11—55 மாலை 6 மணிக்கு எலப்பாக்கம் கிராமத்தில், தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், முகவை ஆர். எஸ். பாண்டியன், கே.டி.எஸ்.மணி ஆகியோர் பேசுவர்.

இலங்கை தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம்

★

12—11—55 மாலை 6 மணிக்கு கண்டி-கிறித்துவர் கோயில் பாடசாலை மண்டபத்தில், இலங்கை தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்.

13—11—55 அன்று, கண்டி நகராட்சி மண்டபத்தில், மாயாவை கிளைச் செயலாளர் கி. து. மதியழகன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். இலங்கை தி. மு. கழகப் பொதுச்செயலாளரும், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களும் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை-சூளை தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

13—11—55 காலை 10 மணிக்கு சென்னை-சூளை தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, கழக வரவு-செலவு, புதிய பொருளாளரிடம் பொறுப்பை ஒப்படைத்தல், கட்டிட நிதி திரட்டும் திட்டங்கள் ஆகிய பொருள்கள் பற்றி ஆலோசிக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.